## 2.42 ஒழுங்கு நடவடிக்கை நிலுவை இல்லாத வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஓய்வு – இறப்பு – ஓய்வு பணிக்கொடையினை முழுவதுமாக வழங்கல்

ஊரக வளர்ச்சி (இ6) துறை

அரசாணை (நிலை) எண். 187 நாள் : 7.9.1999

படிக்க :

1. அரசாணை எண் 247 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.4.89
2. அரசாணை (நிலை) எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.1.99
3. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்க கடித நாள் 30.3.99
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.18557/99 உள் தணிக்கை (2) நாள் 4.5.99

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சித் துறை அலகில் ஒழுங்கு நடவடிக்கை / ஊழல் தடுப்பு விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்கு ஏதுமின்றி வயது முதிர்வினால் ஓய்வு பெறும் ஊராட்சி (Block Development Officer) ஒன்றிய ஆணையர்கள் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டவுடன் 75% இறப்பு, ஓய்வு பணிக் கொடையை விடுவித்தும் தணிக்கைத் தடைகள் மறுப்புக்காக 25% இறப்பு ஓய்வு பணிக்கொடையை நிறுத்தி வைக்கவும், அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட 25% இறப்பு ஓய்வு பணிக் கொடை தணிக்கை மறுப்பில்லாச் சான்றிதழ் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டவுடன் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை அரசாணையில் நகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் ஓய்வு பெறும் போது தணிக்கைத் தடை நிவர்த்திக்காக தற்போது நிறுத்தி வைக்கப்படும் 25% இறப்பு ஓய்வுப் பணிக் கொடையினை நிறுத்தம் செய்யாமல் அவர்கள் ஓய்வு பெறும் போது முழுமையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அதே போன்று ஊரக வளர்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் பணியாற்றி வரும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் அவர்கள் ஓய்வு பெறும்போது இறப்பு பணிக் கொடையினை முழுமையாக வழங்கக் கோரி தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை குறித்து அரசு ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்து நன்கு ஆய்வு செய்தது.

2. அதன்படி ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லாமல் ஓய்வு பெற அனுமதிக்கப்படும் ஊரக வளர்ச்சித் துறை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனைவருக்கும் இறப்பு ஓய்வு பணிக் கொடையை முழுமையாக ஓய்வு பெறும்போதே விடுவிக்கலாம் எனவும் தணிக்கை மற்றும் பிற வகையில் தணிக்கைத் துறையினர் பிற அலுவலர்களால் கண்டறியப்படும் கடுமையான முறைகேடுக்கும், வேண்டுமென்றோ அல்லது கவனக் குறைவினாலோ நிதி இழப்புக்கு பொறுப்பாகும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்றும் முடிவு எடுத்தது.

3. முன்பக்கம் பத்தி இரண்டில் எடுத்த முடிவின்படி அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. அரசு ஆணை எண். 247 ஊரக வளர்ச்சி துறை நாள் 20.4.1989 ல் வெளியிடப்பட்ட உத்தரவுப்படி ஊரக வளர்ச்சித் துறை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஓய்வு பெறும் பொழுது தணிக்கை நிவர்த்திக்காக தற்போது நிறுத்தி வைக்கப்படும் 25ரூ இறப்பு – ஓய்வு பணிக்கொடையை நிறுத்தம் செய்யாமல் இறப்பு ஓய்வு பணிக்கொடை முழவதையுமே அவர்கள் ஓய்வு பெறும் போது வழங்கலாமென ஆணையிடப்படுகிறது.

2. ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லாமல் இனி ஓய்வு பெற அனுமதிக்கப்படும் ஊரக வளர்ச்சித் துறையின் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் இறப்பு – ஓய்வு பணிக்கொடையை ஓய்வு பெறும்போதே விடுவிக்க வேண்டும்.

3. தணிக்கை மற்றும் பிற வகையில் தணிக்கைத் துறையினர் மற்றும பிற அலுவலர்களால் கண்டறியும் கடுமையான முறைகேடுகளுக்கும் மற்றும் வேண்டுமென்றோ அல்லது கவனக் குறைவினாலோ அல்லது உள்நோக்கத்துடனோ அரசுக்கு ஏற்படும் நிதி இழப்புகளுக்கு பொறுப்பாகும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. இவ்வரசாணை 25.8.99 நாளிட்ட நிதிதுறையின் அ.சா.கு.எண். 2841/எப்.எஸ்/பி/99 ல் அளிக்கப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்